# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவை

## இலங்கை புகையிரத சேவைக்கு உள்நாட்டு மூன்று பெட்டிகள் சகிதம் ஒரு இலகுரக புகையிரத தொகுதியை ஒன்றிணைப்பதற்கான (ASSEMBLING) பெறுகை

**SRS/F.8155**

01. கொழும்பு, த.பெ. இல. 355, தலைமை அலுவலகம், இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (மேல் நிலை) தலைவர் இலங்கை புகையிரத சேவைக்கு உள்நாட்டு மூன்று பெட்டிகள் சகிதம் ஒரு இலகுரக புகையிரத தொகுதியை ஒன்றிணைப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

02. முன்மொழிவுக் கோரிக்கை (RFP) இரண்டு கட்டம் இரண்டு கடிதவுறை நடைமுறையில் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.

03. பின்வரும் முகவரியிலிருந்து 2026-06-08ஆம் திகதி முதல் 2026-06-30ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த முன்மொழிவாளர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | **94 (11) 2438078 அல்லது 94 (11) 4600202** |
| **தொலைநகல்** | : | **94 (11) 2432044** |
| **மின்னஞ்சல்** | : | **srs.slr@gmail.com, tender1srs@gmail.com** |
| **இணையதளம்** | : | **www.railway.gov.lk** |

04. பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள தனிப்பட்ட முன்மொழிவாளர்கள் அல்லது கூட்டு முயற்சியாளரர்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு தகுதியுடையோராவர்.

    (i) முன்மொழிபவர், இலங்கையில் பெரிய அளவிலான கட்டுருவாக்க வேலைகள், உற்பத்தி அல்லது தானியங்கி வாகனங்களை ஒன்றிணைக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக முறையாகப் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகவோ அல்லது ஒரு கூட்டு முயற்சியாகவோ இருக்க வேண்டும்.

    (ii) முன்மொழிப்பவர், அரசாங்கம் அல்லது புகழ்பெற்ற நிறுவனங்களுடன் திட்டங்களை வெற்றிகரமாகக் கையாண்டு செயல்படுத்துவதில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். போதுமான விவரங்கள் முன்மொழிவுடன் வழங்கப்பட வேண்டும்.

    (iii) முன்மொழிபவர், கன உலோகக் கட்டுருவாக்கங்கள், உற்பத்தி மற்றும் கனரக வாகனங்கள் அல்லது இதனையொத்த உருளும் வாகனங்களை ஒன்றிணைக்கும் பணிகள் ஆகிய இரண்டையும் செய்வதற்கான தனது திறனையும் தகுதியையும் நிரூபிக்கும் ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

05. சகல முன்மொழிவுகளுடனும் 8,000,000.00 ரூபா தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருக்க வேண்டும்.

06. இலங்கை ரூபாவில் 96,000.00 மட்டும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2026-06-08ஆம் திகதி முதல் 2026-06-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. முன்மொழிவு முன்னோடிக் கூட்டமொன்று 2026-06-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை, பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ஆம் மாடி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இடம்பெறும்.

08 முன்மொழிவுகளை 2026-07-01ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்

**தலைவர்,**
**உயர் மட்ட பெறுகைக் குழு,**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,**
**நிலை 07, செத்சிறிபாய கட்டம் II,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2026-07-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இலங்கை, பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ஆம் மாடி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி